100
100

# தமிழ்ப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற என்ன செய்யவேண்டும்? வாங்க பார்ப்போம்!



## முழுமதிப்பெண் பெற மாணவர்களுக்கான சில குறிப்புகள்

1. ஒற்று எழுத்துக்களை (மெய்யெழுத்து) வரியின் முதலில் எழுதுவதைத் தவிருங்கள். சொற்களைப் பிரித்து எழுதுவதைத் தவிர்க்கவும். விடைகளை அடித்தல், திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுத வேண்டும்.
2. மனப்பாடப் பாடல்களை எழுதும் போது பாடநூலில் உள்ளது போல் எழுதுங்கள். வரிகளை மடக்கி எழுதாதீர்கள். மனப்பாடப் பாடல்கள் சீர் பிரிக்கப்பட்டு, அடிகள் உரிய வகையில் அமைந்து, நிறுத்தற்குறிகள் சரியாக இடப்பட்டிருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் பெறமுடியும்.
3. நெடுவினாக்களுக்கான விடைகள் பத்தி பிரித்து, துணைத்தலைப்புகள் இட்டு, உரிய இடங்களில் செய்யுள் மேற்கோள் கொடுத்து இருந்தால் மட்டுமே முழு மதிப்பெண்களை பெறலாம்.
4. நண்பனுக்கோ, உறவினருக்கோ கடிதம் எழுதும் போது இடத்தையும், தேதியையும் எழுதிய பிறகே கடிதத்தை எழுத வேண்டும். மற்ற கடிதங்களுக்கு அனுப்புநர், பெறுநர், பொருள் எழுதி கடிதத்தை எழுத வேண்டும். இறுதியில் எந்த கடிதமாக இருந்தாலும் கண்டிப்பாக உறைமேல் முகவரி குறிப்பிட வேண்டும்.
5. கடிதத்தை ஒரே பக்கத்தில் தொடங்கி அதே பக்கத்தில் முடித்தல் நல்லது. முகவரி எழுதும் போது காற்புள்ளி இட்டு, நிறைவில் முற்றுப் புள்ளி இடுங்கள். அஞ்சல் குறியீட்டு எண் அவசியம் எழுதுங்கள். ஆங்கிலத்தில் P.o., T.k., D.t என எழுதக் கூடாது. அஞ்சலகம், வட்டம், மாவட்டம் என எழுதுங்கள்.
6. அலகிட்டு வாய்பாட்டை எழுதும் போது தனித்தனியாக சீர் பிரித்து சரியான வாய்பாட்டை தெளிவாக எழுதினால் முழு மதிப்பெண்களை சுலபமாக பெறலாம். இந்த அலகீட்டு வாய்பாட்டிற்கான திருக்குறளானது இயல் மூன்று மற்றும் இயல் ஆறில் உள்ள திருக்குறளில் இருந்து கேட்கப்படும். எனவே அவற்றை பயிற்சி செய்துக்கொண்டால் இப்பகுதியில் எளிமையாக மதிப்பெண்களை பெறலாம்.
7. படிவம் நிரப்புதலின் போது வினாத்தாளில் கொடுக்கப்பட்ட விவரங்களை மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டும். தனது சொந்த விவரங்களை எக்காரணம் கொண்டு படிவத்தில் குறிப்பிட வேண்டாம்.
8. விரிவானப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளை முதலில் தெளிவாக படிக்க வேண்டும். பிறகு அதற்கு ஏற்றாற்போல் விடைகளை எழுத வேண்டும். (குறிப்புச்சட்டகம், கதையின் மையக்கருத்து, கதைமாந்தர்கள் போன்றவற்றை கொடுத்து எழுதுதல் சிறந்தது)
9. கட்டுரை எழுதும் போது கண்டிப்பாக முன்னுரை மற்றும் முடிவுரை இடம் பெற வேண்டும். தலைப்பு கொடுத்து கட்டுரை எழுத வேண்டும். கட்டுரைக்கு பொருத்தமான மேற்கோள் ஏதேனும் கொடுத்து நிறைவு செய்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

# வினாத்தாள் வடிவமைப்பு

## 10ஆம் வகுப்பு – பொதுத்தமிழ்

**வினாத்தாள் வாசித்தல் (15 நிமிடம்)**

| உட்பிரிவு | வினா எண் | தலைப்பு | கேட்கப்படும் கேள்விகள் | எழுத வேண்டிய கேள்விகள் | மதிப்பெண்கள் | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **பகுதி - I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 15)** | | | | | | |
| | 1 - 11 | உரைநடை | 3 | 3 | 15 | 20 நிமிடம் |
| | | செய்யுள் | 2 | 2 | | |
| | | இலக்கணம் | 3 | 3 | | |
| | | மொழிப்பயிற்சி | 3 | 3 | | |
| | 12 - 15 | செய்யுள் கொடுத்து 4 வினாக்கள் | 4 | 4 | | |
| | குறிப்பு : பாடப்பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு செய்யுள் கொடுக்கப்பட்டு, அதிலிருந்து நான்கு வினாக்கள் கேட்கப்படும். இதுவும் பலவுள் தெரிக வகைதான். | | | | | |
| **பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | | |
| பிரிவு: 1 | 16 - 20 | உரைநடை மற்றும் செய்யுள் | 6 | 4 | 8 | 25 நிமிடம் |
| | 21 | கட்டாய வினா - மனப்பாடத் திருக்குறள். | | | | |
| | குறிப்பு : உரைநடையில் விடைக்கேற்ற வினா இடம் பெற்றுள்ளது. | | | | | |
| பிரிவு: 2 | 22 - 28 | இலக்கணம் (ம) மொழிப்பயிற்சி | 7 | 5 | 10 | |
| | குறிப்பு : கலைச்சொற்கள் வினாவிற்கு மாற்றாக, செவிமாற்றுத் திறனாளர்களுக்கு எளிய மொழித்திறன் வினா இடம்பெற்றுள்ளது. | | | | | |
| **பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | | |
| பிரிவு: 1 | 29 - 31 | உரைநடை | 3 | 2 | 6 | 30 நிமிடம் |
| | குறிப்பு : உரைநடைப் பகுதியில் ஓர் உரை பத்தி 3 வினாக்களுடன் இடம்பெற்றுள்ளது. | | | | | |
| பிரிவு: 2 | 32 - 33 | செய்யுள் | 3 | 2 | 6 | |
| | 34 | கட்டாய வினா - மனப்பாடச் செய்யுள். இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு அமைந்துள்ளது. | | | | |
| பிரிவு: 3 | 35 - 37 | இலக்கணம் | 3 | 2 | 6 | |
| **பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 25)** | | | | | | |
| 38 - 42 | 38 | செய்யுள் நெடுவினா | 2 | 1 | 5 | 45 நிமிடம் |
| | 39 | கடிதம் | 2 | 1 | 5 | |
| | 40 | படம் உணர்த்தும் கருத்து, கவிதை, பத்தி, ஐந்து தொடர்கள் | 1 | 1 | 5 | |
| | 41 | படிவம் | 1 | 1 | 5 | |
| | குறிப்பு : அரசு வெளியிட்டுள்ள நான்கு படிவங்களில் ஏதேனும் ஒரு படிவம் கேட்கப்படும் | | | | | |
| | 42 | மொழிப்பயிற்சி (அ) மொழிபெயர்ப்புப் பகுதி | 2 | 1 | 5 | |
| | குறிப்பு : மொழிப்பெயர்ப்பு வினாவிற்கு மாற்றாக, செவிமாற்றுத் திறனாளர்களுக்கான வினாவாக உரைப்பத்தியைப் படித்து 5 வினாக்களுக்கு விடையளிக்கும் பகுதி இடம்பெற்றுள்ளது. | | | | | |
| **பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 24)** | | | | | | |
| 43 - 45 | 43 | உரைநடை நெடுவினா | 2 | 1 | 8 | 45 நிமிடம் |
| | 44 | துணைப்பாடம் | 2 | 1 | 8 | |
| | 45 | பொதுக்கட்டுரை | 2 | 1 | 8 | |
| குறிப்பு : பாடப்பகுதி சார்ந்து உருவாக்கப்பட்ட வினாக்களும் இடம்பெற்றும். | | | | | | |
| **திருப்புதல் (15 நிமிடம்)** | | | | | | |

# முழு மதிப்பெண்கள் பெற கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

**வினாத்தாள் அமைப்பினைத் தெளிவாக புரிந்து நாம் படித்தால் கண்டிப்பாக தமிழ்ப் பாடத்தில் முழு மதிப்பெண்களை பெற முடியும். அதற்கு கீழ்க்கண்ட குறிப்புகளை மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்.**

| வினா : 1 – 15 | பகுதி – I : ஒரு மதிப்பெண் வினாக்கள் | 15x 1 = 15 |
|---|---|---|

★ வினாத்தாளின் முதல் பகுதியில் 15 ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் முதல் **11 வினாக்கள்** உரைநடை, செய்யுள், இலக்கணம், மொழிப்பயிற்சி ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும். **12லிருந்து 15** வரையுள்ள நான்கு வினாக்கள் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் என்ற வகையில் கேட்கப்படும்.

★ மாணவர்கள் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு மதிப்பெண் வினாக்களையும் நன்றாக படித்துக் கொள்ளுங்கள். இந்த வினாக்களிலிருந்துதான் ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும் என்ற வரையறை இல்லை. ஆனாலும் இவற்றிலிருந்து வினாக்கள் கேட்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த வினாக்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்து வினாக்கள் கேட்கப்படும்.

★ பாடநூலில் உள்ள வினாக்களில் சிறு மாற்றம் செய்து பொதுத் தேர்வில் வினாக்கள் கேட்கப்படலாம். ஆகவே வினாவை கவனமாக படித்து பார்த்து விடையைத் தேர்வு செய்ய வேண்டும்.

★ **உதாரணமாக** பெரிய மீசை சிரித்தார் என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு என்ன? என்ற வினாவிற்கான விடை ***அன்மொழித் தொகை***.

☞ ஆனால் பெரிய மீசை சிரித்தார் என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு என்ன? என கேட்கப்பட்டால் அவ்வினாவிற்காக விடை ***பண்புத்தொகை***.

❖ இது போன்ற சிறு வேறுபாட்டை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

☞ **எடுத்துக்காட்டாக**, ''மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'' - **மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும்** குறிப்பவை முறையே – என்ற வினாவிற்கு **விடை : *திருப்பதியும், திருத்தணியும்***

☞ ஆனால் இவ்வினாவில் சிறு மாற்றம் செய்து, **வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும்** குறிப்பவை முறையே – எனக் கேட்கப்பட்டால் அதற்கு **விடை : *திருத்தணியும் திருப்பதியும்***

☞ எனவே வினாவை கவனத்துடன் படித்துணர்ந்து விடையை சரியாக தேர்வு செய்ய வேண்டும்.

★ பாடநூலில் உள்ள மொழிப் பயிற்சிகளைக் கவனத்துடன் படித்தல் நன்று. தொகைச் சொற்கள், இலக்கணக் குறிப்பு, தொடர் வகைகள், வினா வகைகள், விடை வகைகள் போன்ற பகுதிகளில் அதிக கவனம் செலுத்துங்கள். இதைத் தவிர பாடநூலின் உள்ளிருந்தும் வினாக்கள் கேட்கப்படும். வினாக்கள் அனைத்தையும் நன்கு புரிந்து படித்துகொள்ளுங்கள். உரைநடைப் பகுதிகளில் வண்ண எழுத்துகளால் குறிப்பிடப்பட்டுள்ள பாடல் வரிகள், மேற்கோள்கள் போன்றவற்றையும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். எனவே செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப் பயிற்சி ஆகிய பகுதிகளை மிகுந்த கவனத்துடன் ஒவ்வொரு வரியாக உணர்ந்து படித்தால் எத்தகைய வினாக்களைக் கேட்டாலும் விடையளிக்கலாம்.

★ வினா எண்கள் 12லிருந்து 15வரையிலான வினாக்கள் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க என்ற அமைப்பில் கேட்கப்படும்.

- ☞ **செய்யுள் பகுதியிலுள்ள நூலின் பெயர், ஆசிரியர் பெயர், இலக்கணக் குறிப்பு, பொருள் மற்றும் அடி எதுகைகள்** ஆகியவற்றை நன்கு படித்துக் கொள்ளுங்கள்.
- ☞ தொடர்நிலைச் செய்யுள் அல்லாத செய்யுள் பகுதியிலிருந்தே வினாக்கள் கேட்கப்பட வாய்ப்புகள் அதிகம். எனவே அவற்றில் மிகுந்த கவனம் செலுத்துங்கள். பின்வரும் அட்டவணையை எப்போதும் மனதில் ஏற்றிக் கொள்ளுங்கள்.

## செய்யுள் பகுதி

| பாடல் வரிகள் (தொடங்கும் சொல்) | இடம் பெற்றுள்ள நூல் | நூலாசிரியர் பெயர் |
|---|---|---|
| அன்னை மொழியே<br>தென்னன் மகளே<br>செந்தமிழே<br>உந்தி உணர்வெழுப்ப | கனிச்சாறு | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| காற்றே வா<br>சக்தி குறைந்துபொய் | பாரதியார் கவிதைகள் | பாரதியார் |
| வாளால் அறுத்துச் | பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| அருளைப் பெருக்கி | நீதி வெண்பா | கா.ப.செய்குதம்பிப் பாவலர் |
| தா துகு சோலை தோறுஞ்<br>தண்டலை மயில்க ளாடத்<br>வண்மை யில்லையோர்<br>வெய்யோனொளி தன்மேனியின்<br>ஆழ நெடுந்திரை யாறு<br>உறங்கு கின்ற கும்ப கன்ன | கம்பராமாயணம் | கம்பர் |
| இந்தி ரன்முதற் திசாபாலர் | மெய்க்கீர்த்தி | இரண்டாம் இராசராச சோழன் |
| வண்ணமும் சுண்ணமும்<br>தூசும் துகிரும் ஆரமும்<br>காழியர், கூவியர், கள்நொடை<br>கண்ணுள் வினைஞரும்<br>பழுதுஇல் செய்வினைப் | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| கவிஞன் யானோர்<br>பதவி வாளுக்கும்<br>மாற்றம் எனது மானிடத் | காலக் கணிதம் | கண்ணதாசன் |
| பூக்கையைக் குவித்துப் பூவே<br>வாய்மணி யாகக் கூறும்<br>விரிந்தன கொம்பில் கொய்த<br>உய்முறை அறியேன்; ஓர்ந்த<br>நவமணி வடக்க யில்போல் | தேம்பாவணி | வீரமாமுனிவர் |

| வினா : 16 – 28 | பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் | 9x 2 = 18 |
|---|---|---|

★ பகுதி – 2இல் 18 மதிப்பெண்களுக்கான குறுவினாக்கள் இடம் பெற்றிருக்கும். இப்பகுதி இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

**பிரிவு - 1**

★ **முதல் பிரிவில் (16 – 21)** ஆறு வினாக்கள் கொடுக்கப்பட்டு நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

☞ இதில் 3 வினாக்கள் உரைநடையிலிருந்தும், 3 வினாக்கள் செய்யுள் பகுதியிலிருந்தும் கேட்கப்படும். அதில் ஒரு வினா (உரைநடை) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க எனவும், 21ஆவது வினா (செய்யுள் பகுதி) திருக்குறள் மனப்பாடப் பாடல் கட்டாய வினாவாகவும் கொடுக்கப்பட்டிருக்கும்.

☞ இவ்வினாக்களுக்கு விடையளித்து விட்டால் மீதமுள்ள இரண்டு வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அவ்விரண்டு வினாக்களும் பாடநூல் வினாக்களாக இருக்க வாய்ப்புண்டு. எனவே பாடநூலில் குறுவினாக்களுக்குரிய விடைகளைப் படித்துக் கொள்வது சிறந்தது.

**பிரிவு - 2**

★ **பிரிவு – 2இல் (22 – 28)** ஏழு வினாக்கள் கொடுக்கப்பட்டு ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

☞ இந்த ஏழு வினாக்களில் இலக்கணப் பகுதியிலிருந்து 3 வினாக்களும், மொழிப் பயிற்சியிலிருந்து 4 வினாக்களும் கேட்கப்படும்.

- ❋ சொல்லும் பொருளும்
- ❋ இலக்கணக்குறிப்பு
- ❋ பகுபத உறுப்பிலக்கணம்
- ❋ கலைச்சொல் தருக
- ❋ நிறுத்தற்குறியீடு
- ❋ பிறமொழிச் சொற்களைத் தமிழ்சொல்லாக்குக
- ❋ இருசொற்களை தொடரில் அமைத்தல்
- ❋ பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுதல்
- ❋ தமிழெண்கள்
- ❋ பழமொழி விழிப்புணர்வு & உவமைத்தொடர்
- ❋ ஒருமை பன்மை பிழைகள்
- ❋ மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்தல்
- ❋ கூட்டப்பெயர்கள், வினைமரபு
- ❋ வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
- ❋ தொகைச் சொற்களை விரித்து எழுதுக

ஆகியவை கேட்கப்படலாம். எனவே இப்பகுதிகளை பயிற்சி செய்து கொண்டால் தேர்விற்கு பயனுள்ளதாக இருக்கும்.

## வினா : 29 – 37 | பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் | 6x 3 = 18

★ **பகுதி – 3இல்** 18 மதிப்பெண்களுக்கான சிறு வினாக்கள் இடம் பெற்றிருக்கும். இப்பகுதி மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

### பிரிவு - 1

★ **பிரிவு – 1இல் (29 - 31)** உரைநடைப் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

☞ **29ஆவது வினா** உரைப்பத்தியைப் படித்து மூன்று வினாக்களுக்கு விடையளிக்க என கேட்கப்பட்டிருக்கும்.

☞ மற்ற இரண்டு வினாக்கள் 'திறன் அறிவோம்' வினாக்களிலிருந்தோ அல்லது உள்ளிருந்தோ கேட்கப்படலாம்.

### பிரிவு - 2

★ **பிரிவு – 2இல் (32 – 34)** செய்யுள் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்ற வகையில் அமைந்திருக்கும்.

☞ **34ஆவது வினா (கட்டாய வினா)** செய்யுள் மனப்பாடப் பகுதியிலிருந்து அ அல்லது ஆ என்ற வகையில் இரண்டு பாடல்கள் கேட்கப்பட்டு, **ஒன்றிற்கு மட்டும் விடையளிக்குமாறு அமையும்.**

- அன்னை மொழியே
- பெருமாள் திருமொழி
- நீதி வெண்பா
- தேம்பாவணி
- கம்பராமாயணம்
- சிலப்பதிகாரம்
- காலக்கணிதம்

ஆகிய மனப்பாடப் பாடல்களை மனனம் செய்து, பிழையில்லாமல் அடிக்கடி எழுதிப் பார்த்தல் சிறந்தது. பயிற்சியால் மட்டுமே இப்பகுதியில் முழு மதிப்பெண்களை பெற முடியும்.

☞ மற்ற இரண்டு வினாக்கள் 'திறன் அறிவோம்' வினாக்களிலிருந்தோ அல்லது உள்ளிருந்தோ கேட்கப்படலாம்.

### பிரிவு - 3

★ **பிரிவு – 3இல் (35 – 37)** இலக்கணப் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

☞ இவ்வினாக்களில் அலகிட்டு வாய்பாடு மற்றும் அணியிலக்கணம் கேட்க அதிக வாய்ப்புள்ளது. அவற்றை நன்றாக பயிற்சி செய்தால் முழு மதிப்பெண்கள் பெறலாம்.

☞ **இயல் 3** மற்றும் **இயல் 6** ஆகியவற்றில் உள்ள திருக்குறள்களை அலகிட்டு வாய்பாடு எழுதிப் பழகுங்கள். எவ்வாறு அலகிடுதல் என்பதை பக்க எண் : 20-ஐ பார்க்கவும்.

☞ அணியிலக்கணத்தைப் பொறுத்தவரை

- தற்குறிப்பேற்ற அணி
- தீவக அணி
- நிரல்நிறை அணி
- தன்மையணி

} பக்க எண் : 21-ஐ பார்க்கவும்.

மற்றும் திருக்குறள் பகுதியில் அணி பயின்று வந்துள்ள குறட்பாக்கள் (இயல் மூன்றில் **9, 11, 20,** இயல் ஆறில் **5, 8, 15, 19, 20**) ஆகியவற்றைப் புரிந்து படித்துக் கொள்ளுங்கள்.

| வினா : 38 – 42 | பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் | 5x 5 = 25 |
|---|---|---|

★ **பகுதி – 4இல் (38 – 42)** 25 மதிப்பெண்களுக்கான ஐந்து வினாக்கள் இடம் பெற்றிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

☞ **38வது வினா** செய்யுள் பகுதி நெடுவினாக்கள் இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும். **(அதில் ஒன்று நெடுவினாவும் அல்லது பாநயம் பாராட்டுக வினாவாக இருக்கும். செய்யுள் தொடர்பான பாடல்கள் அல்லது ஒவ்வொரு இயலின் மொழிப்பயிற்சி பகுதியிலுள்ள பாநயம் பாராட்டுக வினாக்கள் இடம்பெறலாம்)**

☞ **39ஆவது வினா** இரண்டு கடிதம் கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும். இக்கடிதங்களில் புகார்க் கடிதம், வாழ்த்துக் கடிதம் அல்லது நண்பனுக்கு மடல் என எவ்வகையில் கடிதம் கேட்கப்பட்டாலும் எழுதும் வகையில் பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

☞ **40ஆவது வினா** படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் கவிதை எழுதுதல், கதையை நிறைவு செய்க, கொடுக்கப்பட்ட தலைப்பில் கவிதை எழுதுதல் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வினா கேட்கப்படும். இது மாணவர்களின் சிந்தனைத் திறனை வெளிக்கொணரும் வினா என்பதால் மாணவர்கள் தம் சிந்தனையில் உதித்தவற்றை எழுதுதல் சிறப்பு.

☞ **41ஆவது வினா** படிவத்தை நிரப்புதல். தமிழக அரசால் வெளியிடப்பட்ட நான்கு வகைப் படிவங்களிலிருந்து ஏதேனும் ஒரு படிவத்தைத் நிரப்புமாறு கேட்கப்பட்டிருக்கும். அப்படிவங்கள் இந்நூலின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிவங்களில் வினாவில் கொடுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டே நிரப்ப வேண்டும்.

☞ பொதுத் தேர்வு விடைத்தாளில் படிவங்கள் தைக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்ட வினாவிற்கேற்ற படிவத்தை தேர்வு செய்து, வினா எண்ணை அப்படிவத்தில் எழுதி நிரப்ப வேண்டும்.

**குறிப்பு :** படிவம் நிரப்புதலில் உங்களுடைய பெயரையோ அல்லது உங்களைப் பற்றிய எந்த தகவலையோ எழுதிவிடக்கூடாது. அவ்வினாவில் கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டே நாம் அப்படிவத்தை நிரப்ப வேண்டும்.

☞ **42ஆவது வினா பாடநூலில் உள்ள நிற்க அதற்குத் தக அல்லது மொழியோடு விளையாடு அல்லது மொழிபெயர்த்தல்** ஆகிய பகுதிகளிலிருந்து இரண்டு வினா கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும். மொழிபெயர்ப்பு வினா கேட்கப்பட்டால் செவி மாற்றுத் திறனாளர்களுக்காக மாற்று வினாவாக உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் வினா கொடுக்கப்பட்டிருக்கும்.

## செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

**குறிப்பு :** மற்ற மாணவர்கள் அவ்வினாவைத் தவிர்த்திட வேண்டும். அவ்வினா எளிதாக இருக்கும் என்பதால் அதை எழுதக் கூடாது.

| வினா : 43 – 45 | பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் | 3x 8 = 24 |
|---|---|---|

★ **பகுதி – 5இல் (43 – 45)** 24 மதிப்பெண்களுக்கான மூன்று 8 மதிப்பெண் வினாக்கள் இடம் பெற்றிருக்கும். மூன்று வினாக்களுமே இரண்டு வினா கொடுத்து ஒன்று எழுதுமாறு அல்லது வடிவில் கேட்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

☞ **43ஆவது வினா**

உரைநடை பகுதியிலிருந்து 'திறன் அறிவோம்' வினாக்களிலிருந்தோ அல்லது பாடநூல் உள்ளிருந்தோ கேட்கப்படும். விடையை உட்தலைப்புகளிட்டு தெளிவாக எழுதினால் மட்டுமே முழு மதிப்பெண்களைப் பெறலாம்.

☞ **44ஆவது வினா**

இதில் துணைப்பாட (விரிவானம்) நெடுவினாக்கள் கேட்கப்படும். இதில் கதைகளின் சுருக்கம், கதை வழியே வெளிக்கொணரப்படும் தத்துவங்கள் பற்றிய வினாக்களும் கேட்கப்படலாம். உட்தலைப்புகளிட்டு எழுதினால் முழு மதிப்பெண்கள் பெறலாம்.

☞ **45ஆவது வினா**

தலைப்பு கொடுத்தோ அல்லது குறிப்புகள் கொடுத்தோ கட்டுரை எழுதுமாறு வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும். அக்குறிப்புகளை நன்கு படித்து புரிந்து கொண்டு உட்தலைப்புகளிட்டு கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டாக**

❖ "சான்றோர் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக என்பது பொதுவான கட்டுரை. ஆனால் "குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக என்று குறிப்புகள் கொடுக்கப்பட்டால் அக்குறிப்புகளில் உள்ள சிற்றிலக்கியங்களைப் (பிள்ளைத்தமிழ், சதகம், பரணி, கலம்பகம், உலா, அந்தாதி, கோவை) படைத்த புலவர்களைப் பற்றியும் அவர்களால் தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பது பற்றியுமே எழுத வேண்டும். வேறு புலவர்களைப் பற்றி எழுதக் கூடாது.

❖ ஆகவே கட்டுரை வினாக்களைப் பொறுத்தவரை வினாக்களை நன்கு படித்து புரிந்து கொண்டு விடைகளை எழுதுவது முக்கியம்.

# இலக்கணப் பகுதிகள் ஒரு பார்வை

## இயல் – 1 : எழுத்து, சொல்

❖ **முதலெழுத்து :** (உயிர் 12 + மெய் 18 = 30 முதலெழுத்துக்கள்.

❖ **சார்பெழுத்து :** உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

| | |
|---|---|
| **உயிரளபெடை :** உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிப்பது.<br>❖ **செய்யுளிசை :** செய்யுளில் ஓசை குறையும்போது அதை நிறைவு செய்வது.<br>❖ **இன்னிசை :** செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது<br>❖ **சொல்லிசை :** செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாக திரிந்து அளபெடுப்பது. | **அம்மாஅ**<br>**ஓஒதல் வேண்டும்**<br>**கெடுப்பதூஉம்**<br>**உரனசைஇ** |
| **ஒற்றளபெடை :** மெய்யெழுத்துகளான (ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்) ஆகிய பத்தும், ∴ என்னும் ஆய்த எழுத்தும் செய்யுளின் ஓசை குறையும்போது நிறைவு செய்ய அளபெடுப்பது. | **எங்ங்கிறைவன்** |
| **தொழிற்பெயர் :** எண், இடம், காலம், பால் ஆகியவற்றை குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது. | **ஈதல், நடத்தல்** |
| **சொல் :** ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துக்கள் சேர்ந்தோ பொருள் தருவது. | **வா, பூ, மாடு, புல்** |

**தனிமொழி :** ஒரு சொல் தனித்து நின்று பொருள் தந்தவது. **(எ.கா) கண், படி - கண்ணன், படித்தான்**

**தொடர்மொழி :** இரண்டிற்கும் மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது **(எ.கா) கண்ணன் வந்தான்**

**பொதுமொழி :** ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும், தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது **(எ.கா) எட்டு - எண்ணைன் குறிக்கும்**

| | |
|---|---|
| **விகுதி பெற்ற தொழிற்பெயர் :** வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகுவது. | **நடை, நடத்தல்** |
| **எதிர்மறைத் தொழிற்பெயர் :** எதிர்மறைப் பொருளில் வருவது. | **நடவாமை, கொல்லாமை** |
| **முதனிலைத் தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராய் வருவது. | **தட்டு, உரை, அடி** |
| **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது. | **கெடுதல் = கெடு - கேடு** |
| **வினையாலணையும் பெயர் :** ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும், ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது. | **வந்தவர் அவர்தான்.** |

## இயல் – 2 : தொகைநிலைத் தொடர்கள்

| இலக்கண விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|
| **தொகைநிலைத் தொடர் :** வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்பது. | **கரும்பு தின்றான்** |
| **வேற்றுமைத்தொகை :** ஒரு தொடரில் வேற்றுமை (ஐ, ஆல், கு, இன், அது, கண்) உருபுகள் மறைந்து வந்து பொருள் உணர்த்துவது. | **மதுரை சென்றார்** |
| **உருபும் பயனும் உடன்தொக்க தொகை :** ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது. | **தேர்ப்பாகன்** |
| **வினைத்தொகை :** இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது. | **வீசுதென்றல், கொள்களிறு** |
| **பண்புத்தொகை :** பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும், ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது. | **செங்காந்தள், இன்மொழி** |
| **இருபெயரொட்டுப் பண்புத்தொகை :** சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவது. | **மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு** |
| **உவமைத்தொகை :** உவமைக்கும், பொருளுக்கும் இடையில் உவமஉருபு மறைந்து வருவது. | **மலர்க்கை** |
| **உம்மைத்தொகை :** இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது. | **அண்ணன் தம்பி, தாய்சேய்** |
| **அன்மொழித் தொகை :** வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து பொருள் தருவது. | **சிவப்புச்சட்டை பேசினார், முறுக்கு மீசை வந்தார்.** |

## இயல் – 3 தொகாநிலைத் தொடர்

| | |
|---|---|
| **தொகாநிலைத்தொடர் :** ஒரு தொடரில் சொற்களுக்கு இடையில் சொல்லோ, உருபோ மறைந்து வராமல் பொருளை வெளிப்படையாய் உணர்த்துவது. இது ஒன்பது வகைப்படும். | **எ.கா : காற்று வீசியது குயில் கூவியது** |

**வகைகள்**

**எழுவாய்த்தொடர் :** எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது. **(எ.கா) இனியன் கவிஞர் (பெயர்), காவிரி பாய்ந்தது (வினை), பேருந்து வருமா? (வினா)**

**விளித்தொடர் :** விளியுடன் வினை தொடர்வது. **(எ.கா) நண்பா எழுது!**

**வினைமுற்றுத்தொடர் :** வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது. **(எ.கா) பாடினாள் கண்ணகி**

**பெயரெச்சத்தொடர் :** முற்றுப் பெறாத வினை, பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது. **(எ.கா) கேட்ட பாடல்**

**வினையெச்சத்தொடர் :** முற்றுப் பெறாத வினை, வினைச் சொல்லைக் கொண்டு முடிவது. **(எ.கா) பாடி மகிழ்ந்தனர்**

**வேற்றுமைத்தொடர் :** வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள். **(எ.கா) அன்பால் கட்டினார்**

**இடைச்சொல் தொடர் :** இடைச் சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது. **(எ.கா) மற்றொன்று – மற்று + ஒன்று**

**உரிச்சொல் தொடர் :** உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது. **(எ.கா) சாலச் சிறந்தது**

**அடுக்குத் தொடர் :** ஒரு சொல் இரண்டு, மூன்று முறை அடுக்கித் தொடர்வது. **(எ.கா) வருக! வருக! வருக!**

## இயல் – 4 : இலக்கணம் – பொது

| | | |
|---|---|---|
| | **பால்பகுப்புகள்** | |
| **இருதிணை** | **உயர்திணை** | வீரன், அண்ணன், மருதன் - ஆண்பால்<br>மகள், அரசி, தலைவி - பெண்பால்<br>மக்கள், பெண்கள், ஆடவர் - பலர்பால் |
| | **அஃறிணை** | யானை, புறா, மலை - ஒன்றன்பால்<br>பசுக்கள், மலைகள் - பலவின்பால் |
| **ஐம்பால்** | **1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால் 4. ஒன்றன்பால் 5. பலவின்பால்** | |

| | | | |
|---|---|---|---|
| **மூவிடம்** | **இடம்** | **பெயர்** | **வினை** |
| | **தன்மை** | நான், யான், நாம், யாம் | வந்தேன், வந்தோம் |
| | **முன்னிலை** | நீ, நீர், நீவிர், நீங்கள் | நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் |
| | **படர்க்கை** | அவன், அவள், அவர், அது, அவை | வந்தான், சென்றான், படித்தனர், பேசினார்கள், பறந்தது, பறந்தன |

| | | | |
|---|---|---|---|
| **வழு** | | **வழு** | **வழாநிலை** |
| | **1. திணை** | **இராமன் வந்தது** | **இராமன் வந்தான்** |
| | **2. பால்** | **செல்வி உண்டான்** | **செல்வி உண்டாள்** |
| | **3. இடம்** | **நீ வந்தேன்** | **நீ வந்தாய்** |
| | **4. காலம்** | **நாளை வந்தான்** | **நாளை வருவான்** |
| | **5. வினா** | **ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ? பெரியதோ?' என்று கேட்டல்** | **இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது ?' என்று கேட்டல்** |
| | **6. விடை** | **'கண்ணன் எங்கே இருக்கிறார்?' - வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது - விடையளித்தல்** | **'கண்ணன் எங்கே இருக்கிறார்?' - வினாவிற்கு கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் - விடையளித்தல்** |
| | **7. மரபு** | **மாமரங்கள் உள்ள பகுதியை மாந்தோட்டம் என்று கூறுதல்.** | **மாமரங்கள் உள்ள பகுதியை மாந்தோப்பு என்று கூறுதல்.** |

### வழுவமைதி

**திணை வழுவமைதி :** உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாக கொள்ளப்பட்டது.
**(எ.கா) என் அம்மை வந்தாள் (அம்மை - இங்கு மாட்டை குறிக்கிறது)**

**பால் வழுவமைதி :** உவப்பின் காரணமாக பெண்பால், ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.
**(எ.கா) வாடா இராசா, வாடா கண்ணா (மகளை தாய் அழைப்பது)**

**இட வழுவமைதி :** தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது.
**(எ.கா) இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான் (மாறன் என்பவன் தன்னை பற்றி பிறரிடம் கூறும்போது)**

**கால வழுவமைதி :** அவரது வருகையின் உறுதித்தன்மையை கூறுவது.
**(எ.கா) குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் (வருகிறார் என்ற காலம் உறுதியாக வெளிப்பட்டதால்)**

**மரபு வழுவமைதி :** கவிதையில் இடம்பெற்றுள்ளதால்.
**(எ.கா) கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதிற் படவேணும்" – பாரதியார். (குயில் கூவும் என்பதே மரபு, குயில் கத்தும் என்பது மரபு வழு)**

## இயல் – 5 : வினா, விடை வகைகள், பொருள்கோள்

### வினா வகைகள்

**அறிவினா** : தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.
**(எ.கா) மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல்.**

**அறியா வினா** : தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது.
**(எ.கா) ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்டல்.**

**ஐய வினா** : ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது.
**(எ.கா) 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல்.**

**கொளல் வினா** : தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது.
**(எ.கா) 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல்.**

**கொடை வினா** : பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.
**(எ.கா) 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல்.**

**ஏவல் வினா** : ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற்பொருட்டு வினவுவது.
**(எ.கா) "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? " என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.**

### விடை வகைகள்

| | | |
|---|---|---|
| வெளிப்படை விடைகள் | 1. சுட்டு விடை | சுட்டிக் கூறும் விடை. **(எ.கா) 'கடைத்தெரு எங்குள்ளது,' என்ற வினாவிற்கு, 'வலப்பக்கத்தில் உள்ளது'' எனக் கூறல்.** |
| | 2. மறை விடை | மறுத்துக் கூறும் விடை. **(எ.கா) 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல்.** |
| | 3. நேர் விடை | உடன்பட்டுக் கூறும் விடை. **(எ.கா) 'கடைக்குப் போவாயா?' என்ற கேள்விக்குப் 'போவேன்' என உடன்பட்டுக் கூறல்.** |
| குறிப்பு விடைகள் | 4. ஏவல் விடை | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. **(எ.கா) இது செய்வாயா?'' என்று வினவியபோது, ''நீயே செய்'' என்று ஏவிக் கூறுவது** |
| | 5. வினா எதிர் வினாதல் விடை | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. **(எ.கா) 'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது.** |
| | 6. உற்றது உரைத்தல் விடை | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். **(எ.கா) 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று உற்றதை உரைப்பது.** |
| | 7. உறுவது கூறல் விடை | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். **(எ.கா) 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது.** |
| | 8. இனமொழி விடை | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். **(எ.கா) ''உனக்குக் கதை எழுதத் தெரியுமா?'' என்ற வினாவிற்குக் ''கட்டுரை எழுதத் தெரியும்'' என்று கூறுவது.** |

### பொருள்கோள்

| | |
|---|---|
| **ஆற்றுநீர்ப் பொருள்கோள்** | ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது |
| **நிரல்நிறைப் பொருள்கோள்** | ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல் நிரையாக (வரிசையாக) அமைவது. இது முறை நிரல்நிறைப் பொருள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் என இரு வகைப்படும். **அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள் ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்** |
| **கொண்டுகூட்டுப் பொருள்கோள்** | ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது. |

## இயல் – 6 : அகப்பொருள் இலக்கணம்

| | |
|---|---|
| **பொருள் இலக்கணம்** | பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளக்குகிறது. |
| **அகப்பொருள்** | அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை. |
| **அகத்திணைகள்** | அன்பின் ஐந்திணைகள் - {குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை} கைக்கிளை, பெருந்திணை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் - ஐந்திணைகளுக்கு உரியது |

### முதற்பொருள் (நிலமும், பொழுதும்)

| திணை | ஐவகை நிலங்கள் | பொழுதுகள் | |
|---|---|---|---|
| | | பெரும்பொழுது | சிறுபொழுது |
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | கார்காலம் | மாலை |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும் | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

### பொழுதுகள் (ஆறு கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது)

| பெரும்பொழுது | | சிறுபொழுது | |
|---|---|---|---|
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி | காலை | காலை 6 மணி முதல் 10 மணி வரை |
| குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை | நண்பகல் | காலை 10 மணி முதல் 2 மணி வரை |
| முன்பனிக்காலம் | மார்கழி, தை | எற்பாடு | பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை |
| பின்பனிக்காலம் | மாசி, பங்குனி | மாலை | மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை |
| இளவேனிற்காலம் | சித்திரை, வைகாசி | யாமம் | இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை |
| முதுவேனிற்காலம் | ஆனி, ஆடி | வைகறை | இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை |

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| **தெய்வம்** | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| **மக்கள்** | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| **உணவு** | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| **விலங்கு** | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| **பூ** | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| **மரம்** | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| **பறவை** | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| **ஊர்** | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| **நீர்** | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| **பறை** | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| **யாழ்** | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| **பண்** | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| **தொழில்** | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

| | |
|---|---|
| **உரிப்பொருள்** | ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியே உள்ள மக்களின் ஒழுக்கநெறி. |

## இயல் – 7 : புறப்பொருள் இலக்கணம்

| புறத்திணை | திணை விளக்கம் |
|---|---|
| வெட்சி | ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வது. |
| கரந்தை | கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச்செல்லும் போது கரந்தை பூவினை சூடிச் செல்வது. |
| வஞ்சி | மண்ணாசை கொண்டு பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது. |
| காஞ்சி | தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடுவது. |
| நொச்சி | கோட்டையைக் காக்க வேண்டி உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிடுவது. |
| உழிஞை | மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைப்பது. |
| தும்பை | பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடி போரிடுவது. |
| பாடாண் | பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது. |
| பொதுவியல் | வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது. |

## இயல் – 8 : பா – வகை, அலகிடுதல்

| பாவகை | ஓசை | விளக்கம் |
|---|---|---|
| வெண்பா | செப்பலோசை | இருவர் உரையாடுவது போன்ற ஓசை. **(எ.கா) திருக்குறள், நாலடியார்** |
| அகவற்பா (அ) ஆசிரியப்பா | அகவலோசை | இலக்கண கட்டுக்கோப்பு குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருக்கும் ஒருவர் பேசுவது / சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை. **(எ.கா) சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை** |
| கலிப்பா | துள்ளலோசை | கன்று துள்ளியது போன்று தாழ்ந்து உயர்ந்து வரும் ஓசை. |
| வஞ்சிப்பா | தூங்கலோசை | சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை. தாழ்ந்தே வரும் ஓசை. |

| பொது இலக்கணம் | வெண்பா | ஆசிரியப்பா(அகவற்பா) |
|---|---|---|
| ஓசை | செப்பல் ஓசை | அகவல் ஓசை |
| சீர் | ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இதில் இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும். | ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும். |
| தளை | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும். | ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். |
| அடி | இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும்(கலிவெண்பா - 13அடிக்கு மேல் வரும்) | மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். |
| முடிப்பு | ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்ப்பாட்டில் முடியும். | ஏகாரத்தில் முடியும். |

### வாய்ப்பாடு

**அலகிடுதல் :** செய்யுளின் சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

(எ.கா) **கல்லார்** படி – 1 : **சீர்பிரித்தல் :** கல் / லார்

படி – 2 : **அசையை எழுதுதல் :** நேர் நேர் படி – 3 : **வாய்பாடு காணுதல் :** தேமா

**எய்துவர்** என்ற சீரின் வாய்பாடு **கூவிளம்** ஆகும்.

### அசை

**நேரசை :** தனிக்குறில், தனிக்குறில் ஒற்று, தனிநெடில், தனிநெடில் ஒற்று

**நிரையசை :** இரண்டு குறில், இரண்டு குறில் ஒற்று, குறில் நெடில், குறில் நெடில் ஒற்று

| ஓரசைச்சீர் | |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

| ஈரசைச்சீர் | |
|---|---|
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |
| நிரை நிரை | கருவிளம் |
| நேர் நிரை | கூவிளம் |

| மூவசைச்சீர் | |
|---|---|
| நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

## இயல் – 9 : அணிகள்

**அணி :** செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன 'அணிகள்'

**தற்குறிப்பேற்ற அணி :** இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது.

(எ.கா) **'எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்**
**சொன்முறை தொடுப்பது தன்மையாகும்'. - தண்டியலங்காரம் - 27**

**தீவக அணி :** செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குதல்.

(எ.கா) **"சேந்தன வேந்தன..................**
**.................... புன்குலமும் வீழ்ந்து."**

**நிரல்நிறை அணி :** சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது.


(எ.கா) **"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"**

**தன்மை அணி :** எந்த வகை பொருளாக இருந்தாலும் அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது. இது நான்கு வகைப்படும். அவை பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி.

(எ.கா) **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது." - குறள் - 45**

## 1 முதல் 100 வரை உள்ள தமிழெண்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 21 | உக | 41 | சக | 61 | சாக | 81 | அக |
| 2 | உ | 22 | உஉ | 42 | சஉ | 62 | சாஉ | 82 | அஉ |
| 3 | ங | 23 | உங | 43 | சங | 63 | சாங | 83 | அங |
| 4 | ச | 24 | உச | 44 | சச | 64 | சாச | 84 | அச |
| 5 | ரு | 25 | உரு | 45 | சரு | 65 | சாரு | 85 | அரு |
| 6 | சா | 26 | உசா | 46 | சசா | 66 | சாசா | 86 | அசா |
| 7 | எ | 27 | உஎ | 47 | சஎ | 67 | சாஎ | 87 | அஎ |
| 8 | அ | 28 | உஅ | 48 | சஅ | 68 | சாஅ | 88 | அஅ |
| 9 | கூ | 29 | உகூ | 49 | சகூ | 69 | சாகூ | 89 | அகூ |
| 10 | க0 | 30 | ங0 | 50 | ரு0 | 70 | எ0 | 90 | கூ0 |
| 11 | கக | 31 | ஙக | 51 | ருக | 71 | எக | 91 | கூக |
| 12 | கஉ | 32 | ஙஉ | 52 | ருஉ | 72 | எஉ | 92 | கூஉ |
| 13 | கங | 33 | ஙங | 53 | ருங | 73 | எங | 93 | கூங |
| 14 | கச | 34 | ஙச | 54 | ருச | 74 | எச | 94 | கூச |
| 15 | கரு | 35 | ஙரு | 55 | ருரு | 75 | எரு | 95 | கூரு |
| 16 | கசா | 36 | ஙசா | 56 | ருசா | 76 | எசா | 96 | கூசா |
| 17 | கஎ | 37 | ஙஎ | 57 | ருஎ | 77 | எஎ | 97 | கூஎ |
| 18 | கஅ | 38 | ஙஅ | 58 | ருஅ | 78 | எஅ | 98 | கூஅ |
| 19 | ககூ | 39 | ஙகூ | 59 | ருகூ | 79 | எகூ | 99 | கூகூ |
| 20 | உ0 | 40 | ச0 | 60 | சா0 | 80 | அ0 | 100 | க00 |



## வல்லெழுத்து மிகும் இடங்கள்

| வ.எண் | வல்லெழுத்து மிகும் இடங்கள் | எ.கா |
|---|---|---|
| 1. | கோடி, பத்து, எட்டு, அசை, பாதி எனவரும் எண்ணுப்பெயர்களின் முன் மிகும். | **கோடிக்கரை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, அரைப்பங்கு, பாதிக்கட்டணம்** |
| 2. | உவமைத்தொகையில் மிகும். | **முத்துப்பல்** |
| 3. | இரண்டாம் வேற்றுமைவிரியில் மிகும். | **மழைநீரைச்சேமிப்போம்** |
| 4. | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் மிகும். | **தாமரைக்குளம்** |
| 5. | நான்காம் வேற்றுமை விரியில் மிகும். | **தம்பிக்குக்கொடுத்தான்** |
| 6. | அஃறிணை ஆறாம் வேற்றுமைத்தொகையில் மிகும். | **யானைக்கொம்பு** |
| 7. | ஏழாம் வேற்றுமைத்தொகையில் மிகும். | **மனைப்புகுந்தார்** |
| 8. | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் மிகும். | **வேர்க்கடலை** |
| 9. | சுட்டெழுத்துகளின் முன் வரும். | **அப்புத்தகம், இப்பெட்டி** |
| 10. | சுட்டுத்திரிபுகளின் முன் வரும். | **அந்தப்பெட்டி, இந்தப்புத்தகம்** |
| 11. | ஓரெழுத்து ஒருமொழியின் பின் மிகும். | **கைப்பெட்டி, தைப்பொங்கல்** |
| 12. | ஐகார ஈற்றுச்சொற்களின்பின் மிகும். | **தொலைக்காட்சி, தொலைப்பேசி** |
| 13. | ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின்பின் மிகும். | **ஓடாக்குதிரை, பாடாப்பாட்டு** |
| 14. | 'எ' என்னும் வினா எழுத்தின்பின் மிகும். | **எப்பொருள்** |
| 15. | அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் மிகும். | **அப்படிச்சொன்னான், இப்படிப்பேசலாமா?, எப்படித்தருவாய்?** |
| 16. | ஆய், போய் என்றும் வினையெச்சங்களின்பின் மிகும். | **வருவதாய்ச்சொன்னான், போய்ப்பார்த்தான்** |
| 17. | இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் மிகும். | **சாரைப்பாம்பு, தைத்திங்கள்** |

## வல்லெழுத்து மிகா இடங்கள்

| வ.எண் | வல்லெழுத்து மிகா இடங்கள் | எ.கா | |
|---|---|---|---|
| 1. | அது, இது, எது, ஏது, யாது, அவை, எவை, இவை, யாவை, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகாது. | **அதுகண்<br>எது தந்தாய்<br>யாது பொருள்<br>எவை சிறந்தன<br>யாவை போயின<br>இத்தனை பழமை<br>அவ்வளவு பசுக்கள்<br>எவ்வளவு கண்கள்** | **இது புத்தகம்<br>ஏது கண்டாய்<br>அவை பெரியன<br>இவை புதியவை<br>அத்தனை புதுமையா<br>எத்தனை பண்பாடு?<br>இவ்வளவு தங்கம்** |
| 2. | வினைத்தொகையில் மிகாது. | **பாய் புலி, சுடு சோறு** | |
| 3. | உம்மைத்தொகையில் மிகாது. | **தாய்தந்தை, இரவுபகல்** | |
| 4. | ஒன்று முதல் ஆறுவரையுள்ள எண்ணுப்பெயர்களின்பின் மிகாது. | **ஒன்று செய், இரண்டு புத்தகங்கள், மூன்று பெட்டிகள்** | |
| 5. | எழுவாய்த் தொடரில் மிகாது. | **தம்பி போ!, தங்கை பாடினாள்.** | |
| 6. | பெயரெச்சத்தின் பின் மிகாது. | **நல்ல பாம்பு, ஓடிய குதிரை** | |
| 7. | வியங்கோள் வினைமுற்றின்பின் மிகாது. | **வாழிய செந்தமிழ்!, அழிக தீயொழுக்கம்** | |
| 8. | 'கள்' என்னும் இறுதிநிலைக்குமுன் (வன்தொடர்க்குற்றியலுகரம்) மிகாது. | **வாழ்த்துகள், எழுத்துகள் தோப்புகள்** | |

| நிறுத்தற்குறியீடு | |
|---|---|
| **வகைகள்** | **எ.கா** |
| **காற்புள்ளி (,)** : பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், எனவே, எனினும், ஆயினும், ஆதலின், ஆதலால், ஆகவே, முதலிய இணைப்புச் சொற்களின்பின், முகவரியில் இறுதிவரி தவிர்த்துப் பிற இடங்களில் காற்புள்ளி இடவேண்டும். | ★ நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள். ★ மகனே, நான் சொல்வதைக் கேள். |
| **அரைப்புள்ளி (;)** : ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும், எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இட வேண்டும். | ★ சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம் ; மூவேந்தரையும் பாடும் காப்பியம். ★ இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை. |
| **முக்காற் புள்ளி (:)** : ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடவேண்டும். | ★ மத்தேயு, 8 : 6 ★ பெயர் : கனிமொழி ★ முக்கனி என்பன வருமாறு : மா, பலா, வாழை |
| **முற்றுப் புள்ளி (.)** : சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், கையெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும். | ★ கந்தன் கடைக்குச் சென்றான். ★ 29.10.2019 ★ அண்ணா நகர், பாலக்கரை, திருச்சி~20. |
| **வினாக்குறி (?)** : ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்க்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடவேண்டும். | ★ இங்கே இருப்பவர் யார்? ★ நீ தருவாயா? |
| **உணர்ச்சிக் குறி (!)** : மகிழ்ச்சி, அச்சம், வியப்பு, அவலம், அந்தோ! வாழ்த்தல், வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின் பின்(!) இக்குறி இடல்வேண்டும். | ★ வெற்றி! வெற்றி! ★ பாம்பு! பாம்பு! ★ வாழ்க! வாழ்க! |
| **ஒற்றை மேற்கோள்குறி (‘ ’)** : இக்குறி தற்சுட்டின்கண்ணும் (ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும். | ★ ‘ஏ’ என்று சொன்னான். ★ திருவள்ளுவர், ‘திருக்குறள்’ என்னும் நூலை இயற்றினார். |
| **இரட்டை மேற்கோள்குறி (“ ”)** : பொன்மொழிகளைக் குறிப்பிடும் இடத்தும், நேர்க்கூற்றுத் தொடரிலும் இரட்டை மேற்கோள்குறி இடவேண்டும். | ★ இராமன், “நாளை வருகிறேன்” என்று கூறிச் சென்றான். ★ “அறம் செய விரும்பு” என்றார் ஔவையார். |

**இதுவரை தரப்பட்ட குறிப்புகளை நன்கு புரிந்து கொள்ளுங்கள். மனதில் நிலைநிறுத்துங்கள். தேர்வில் பயன்படுத்துங்கள். நூறு மதிப்பெண்கள் கனவு கண் முன்னே நனவாவதைக் காண்பீர்கள்.**

**இதுவே வெற்றிக்கு வழி**

**வாழ்த்துகள்!!!**

## நூலக உறுப்பினர் படிவம்

**______________________ மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ______________________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : உறுப்பினர் எண்

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த நாள் :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) :

நான் _________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ ______ சந்தா தொகை ரூ ______ ஆக மொத்தம் ரூ ______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ____________ அவர்களை எனக்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

## மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : தேதி : வகுப்பும் பிரிவும் :

1. மாணவரின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள்:

| தேர்வின் பெயர் | பதிவுஎண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள்(100) |
|---|---|---|---|
| | | **தமிழ்** | |
| | | **ஆங்கிலம்** | |
| | | **கணிதம்** | |
| | | **அறிவியல்** | |
| | | **சமூக அறிவியல்** | |
| | | **மொத்தம்** | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவரின் கையெழுத்து

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் :
4. தேசிய இனம் :
5. இரத்த வகை :
6. உயரம் மற்றும் எடை :
7. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளயின் முகவரி :
12. சேரவிரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் : மாணவரின் கையெழுத்து

இடம் :

நாள் :

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

## பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ______________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள

இடம் :

நாள் :